# ஸோம்னா

"ஸோம்னா?" என்று கேட்டவன் சிதம்பரம்.

"ம்புலிசம்," என்றேன். "ஸோம்னாம்புலிசம்" என்றேன் ஒட்டவைத்து.

"அப்படி என்றால் என்ன?"

"சரியாக அர்த்தம் சொல்கிறேன்" என்று சேம்பர்ஸ் அகராதியைப் புரட்டி... "ம்... ஸோம்ப்ராரோ, ஸோம், ஸோமர்ஸால்ட், ஸோமய்யா, ஸோம்னஸ், ஸோம்னாம்புலிசம்... தூக்கத்தில் நடப்பது, ஒருவித தன்னியக்க நிலையில் செய்த காரியங்கள்... நினைவில் இல்லாத நிலை..." என்று நிமிர்ந்தேன்.

"என் கம்ப்ளெய்ண்ட் அது இல்லை" என்றான். "எனக்கு எல்லாம் நினைவில் இருக்கிறது."

"உன் கம்ப்ளெய்ண்ட் எது?"

"கனவுகள்."

"சொப்பனாவஸ்தையா? தளர்ச்சியடைந்து பலவீனமா? பூச்சி பறப்பது போல் தெரிதலா...?"

"சித்த வைத்தியசாலை விளம்பரம் போலப் பேசாதே. எனக்குக் கோபம் வருகிறது."

"என் அருமை வாலிப நண்பனே! உன் மனத்தில் இருப்பதைச் சொல்."

"ஆத்மா, போன வாரம் நான் ஒரு பழைய புத்தகக் கடைக்குப் போயிருந்தேன்..."

சிதம்பரம் மேலே சொல்வதற்குள் அவனை வர்ணித்துவிடுவது உசிதம்.

சிதம்பரம் என் நண்பன். திடீரென்று பேனாவை எடுத்துவைத்துக் கொண்டு பாட்டு எழுதும் நண்பன். அவன் எழுதிய, "உனக்காக நான் உலகத்தின் எல்லைவரை உலவத் தயார்..." என்கிற பாட்டு, மெல்லிசை வடிவத்தில் (பாடியவர் ஹேமலதா, இசையமைப்பு மல்லி) வானொலியில் ஒலிபரப்பாயிற்று.

அதிலிருந்து துவங்கி ஒரு குயர் நோட்டுப் பூரா பாடல்களாகவே எழுதி நிரப்பியிருக்கிறான். எல்லாப் பாடல்களிலும் காதலர்கள் ஒருத்தரை ஒருத்தர் சளைக்காமல், "நீ சந்திரன், நீ என் உணர்வின் உள் மூச்சு, இதயம், இன்பப் பெட்டகம்..." என்று அழைத்துக் கொள்வார்கள். அவர்களுக்குச் சாப்பாடு வேண்டாம். காப்பி வேண்டாம். ஒருவர் எதிரில் ஒருவர் இருந்தால் போதும்.

நான் – அதாவது ஆத்மா, எனக்கு அந்தக் கவித்வ பாவங்கள் புரியவில்லை. காதலர்கள் இன்னும் கொஞ்சம் தைரியமாக இருக்கலாம் என்பது என் கொள்கை. அதிகம் பேச்சு வேண்டாம் என்பதும் என் கொள்கை. உணர்ச்சிவசப்படும் சிதம்பரம் இதை எதிர்த்தாலும் என் நண்பன்தான்... சிதம்பரம் சொன்னதைத் தொடர்கிறேன்...

"பழைய புத்தகக் கடைக்குப் போயிருந்தேனா? அங்கே நான் ரொம்ப நாளாகத் தேடிய புத்தகம் ஒன்று இருந்தது. என்ன விலை என்று கேட்டதற்கு ஒரு ரூபாய் என்றான்.

எட்டணாவுக்குக் கேட்டேன். கொடுக்கமாட்டேன் என்றான். வந்துவிட்டேன். புத்தகம் 45 பக்கம்தான் இருக்கும். ஒரு ரூபாயா என்று ஆத்திரத்தில் வந்து விட்டேன். வீட்டுக்கு வந்ததும் மனசு கேட்கவில்லை. 'வருஷக் கணக்காகக் தேடிக்கொண்டிருக்கிறாய். எட்டணாவுக்காக விட்டுவிடப் போகிறாயா?' என்று மறுபடியும் போய் அந்தப் புத்தகத்தை ஒரு ரூபாய் கொடுத்து வாங்கிவந்துவிட்டேன். மறுநாள் படிக்கலாம் என்று புத்தகத்தைத் தேடுகிறேன். தேடுகிறேன், தேடுகிறேன். காணவே காணோம். தெளி–வாகப் புத்தகத்தை வாங்கிவந்து மேஜை மேல் வைத்தது ஞாபகமிருக்கிறது. காலையில் காணவில்லை."

"திருட்டா?"

"இல்லை கனா. புத்தகத்தை எட்டணாவுக்குக் கேட்டுவிட்டுத் திரும்பி வந்தது நிஜம். அதன் தொடர்ச்சியாக மறுபடிக் கடைக்குப் போய் ஒரு ரூபாய் கொடுத்துப் புத்தகத்தை வாங்கினது கனவில். அது கனாவென்று தெரியாமல் அவ்வளவு நிஜமாக ஞாபகத்தில் பதிந்திருக்கிறது. கனவு எது, நிஜம் எது என்று தெரியாமல் குழப்பம் ஏற்பட்டு–விடுகிறது... அதுதான் என் கம்ப்ளெய்ண்ட்."

"அதில் ஏதும் கஷ்டம் ஏற்படுகிறதா உனக்கு?"

"சங்கடமான நிலைகள் ஏற்பட்டுவிடுகின்றன. கனவில் போஸ்ட் பண்ணின லெட்டர், திருப்பித் தந்த கடன்கள் எல்லாம் நனவில் செல்லுபடியாவதில்லையே!"

"பை தி வே, நீ எனக்கு 60 ரூபாய் கொடுக்க வேண்டும். கனவில் திருப்பிக்கொடுத்து–விட்டேன் என்று ஹராத்துப் பண்ணாதே. வாங்கினது டே லைட்டில். அப்போது மொச்சைக் கொட்டை மாதிரி விழித்துக்கொண்டிருந்தாய்."

"நான் இதைச் சாக்காக வைத்துக்கொண்டு எல்லோரையும் ஏமாற்றுகிறேன் என்று நினைக்கிறாயா? என் நிலையில் நீ இல்லை –தர்மசங்கடம் கனவும் நனவும் ரொம்ப இழைகிறது."

"சோலைமலை இளவரசி?"

"கால வித்தியாசம் இல்லையே! தின வாழ்க்கையில் நடப்பது அப்படியே கனவில் தொடர்கிறது."

"ஃப்ராய்ட் என்ன சொன்னார் தெரியுமா?"

"என்ன?"

"என் பெயர் ஸிக்மண்ட் ஃப்ராய்ட் என்று..."

"விளையாடுகிறாய். நான் ஸீரியஸாகப் பேசுகிறேன். உன்னிடம் உபதேசம் கேட்க வந்தேன் பார்..."

"உபதேசமா? கேள். கார்டினால் மாத்திரைகள் வாங்கிக்கொள். ஒன்று, தூங்குவதற்கு முன் சாப்பிடு. பம்பரம் போல் தூங்குவாய். கனவில்லாமல் நிச்சலனமாக..."

"நான் தூங்குவதில் ஒன்றும் குறைவில்லை. தூக்கம் நிறைய வருகிறது. கனவு–களைத்தான் தவிர்க்க முடியவில்லை. நான் அட்வைஸ் கேட்க வந்தது தூக்கத்–திற்கல்ல, மற்றொரு விஷயத்தைப் பற்றி... என் ஆபீசில் ஒரு பெண்..."

நான் சரியாக உட்கார்ந்துகொண்டு, "சொல்லு சொல்லு," என்றேன்.



www.writersujatha.com

“அவள் பெயர் நிர்மலா.”

“வெறும் நிர்மலாவா?”

“நான் இங்கே உட்கார்ந்தால் என் எதிரே பத்தடியில் உட்கார்ந்திருப்பாள். டைப்ரைட்டருக்குப் பின்னால்.”

“டைப்ரைட்டர் டகடகடக... இதயம் படபடபட்... அவள் ஸ்பேஸ்பாரை அழுத்தும்போ–தெல்லாம் உன் ரத்த அழுத்தம் ஒரு 20 பாயிண்ட் எம்புகிறதா?”

“இல்லை.”

“இல்லையா? அவளை நீ காதலிக்கவில்லையா?”

“பார் ஆத்மா, நானும் அவளும் ஓர் இரட்டை வாழ்க்கை வாழ்கிறோம். ஆபீஸில் சாதாரணமாக அளவாகப் பேசிக் கொள்கிறோம். ஹெட் கிளார்க் கூப்பிடுகிறார்’, ‘மானேஜர் வரச் சொன்னார், ‘பர்ஸீவுக்கு என்ன சார் ஸ்பெல்லிங்’ இப்படி... ஆனால் கனவில் வேறுவிதமாகப் பழகுகிறோம்...”

“வேறுவிதமாக என்றால்? கொஞ்சம் நெருக்கமாவா?”

“ஏறக்குறைய... அவளாகத்தான் அன்று வந்தாள். ‘ஸார் உங்க ப்ரொஃபைல் கொஞ்சம் ஷஷிகபூர் மாதிரி இருக்கிறது’ என்றாள். அப்புறம் உங்களைப் பற்றி இன்னும் கொஞ்–சம் தெரிந்துகொள்ள ஆவலாக இருக்கிறது என்றாள். ‘ஒன்று செய்யுங்களேன். ஸஃபையர் தியேட்டரில் சந்திப்போம். இரண்டு டிக்கெட் வாங்கி வைத்திருங்கள். நாளை மாலை’ என்று ரூபாய்கூடக் கொடுத்துவிட்டுப் போனாள். நான் மறுநாள் இரண்டு டிக்கெட் வாங்கிவைத்துக்கொண்டு காத்திருந்தேன், காத்திருந்தேன், அவள் வரவே இல்லை. அவள் என்னுடன் வந்து பேசினதெல்லாம் கனவு.”

“நீ பண்ணினது தப்பு, ஸஃபையர் தியேட்டருக்குக் கனவில் சென்றிருந்தால் அவளைப் பிடித்திருக்கலாம். அவள் ‘அங்கே’ காத்திருந்தாளோ என்னவோ.”

“இல்லை, ஏன் என்றால் அப்புறம் அவள் வராமலிருந்ததற்கு வெள்ளமாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள். சாயங்காலம் பீச்சுக்கு வரச்சொன்னாள்...”

“நீ பீச்சுக்குப் போனாய், பீச்சில் காற்று வந்தது. அவள் வரவில்லை.”

“அவள் வரவில்லை...”

“ட்ரிக்கி! ஒன்று செய்யேன். காலை எழுந்ததும், ராத்திரி பார்த்த கனவைக் குறித்து வைத்துக்கொள்ளேன். குறித்து வைத்துக் கொண்டதெல்லாம் கனவு. நடக்கவேயில்லை என்று திருப்பித் திருப்பி சொல்லிக்கொள்ளேன்...”

“என் கனவுகள் அந்த ரகமில்லை. என் கனவுகளில் நான் முழுசாக, பூரணமாக, ஃபிசிகலாக வாழ்கிறேன். என் கனவுகளில் இயற்கைக்கு விரோதமாக எதுவும் நடக்கிறதில்லை. ஆனால் எல்லோரும் நல்லவர்களாய் இருக்கிறார்கள். பஸ்ஸில் இடம் கிடைக்கிறது. சிரித்துக் கொண்டு பதில் சொல்கிறார்கள். ரொம்பச் சுகமாக இருக்–கிறது. அப்புறம் அந்த ஞாபகங்கள் என் தின வாழ்க்கையின் ஞாபகங்களுடன் அவ்வளவு அழகாக இழைந்து விடுகின்றன. இரண்டு ஞாபகங்களையும் தனியாகப் பிரிக்க முடியவில்லை. நிர்மலாவுடன் நான் கனவில் சந்தித்துப் பேசும் பேச்சுகளில் ஆதாரமான சினேகிதத் தன்மையும்... சுத்தமும் இருக்கின்றன. அவளை நான் தொடு–வதில்லை.”



www.writersujatha.com

“இன்று ராத்திரி தொட்டுவிடு. என்ன ஆனாலும் ஆகட்டும்...”

“என் சோகம் என் நனவுகளின் குழப்பத்தால் இல்லை ஆத்மா. வேறு ஒரு விஷயத்–தால்...” அவன் தன் கைக்குட்டையை எடுத்துக்கொண்டு முகத்தைத் துடைத்துக்–கொண்டு சொன்னான். “சென்ற மூன்று தினங்களாக நிர்மலா என்னுடன் பேசுவ–தில்லை...”

“கனவிலா?”

“எனக்குத்தான் கனவு நனவு எல்லாம் கலந்திருக்கிறது என்று சொன்னேனே. அதைப் பிரிக்கவும் நான் முற்படவில்லையே... பார், சாதாரணமாகத் தினமும் சந்திக்கும் வேளைகளில் அவள் வரவில்லை.”

“போல இருந்ததா?”

“அப்புறம் அவள் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாள். அருமையான கடிதம்... அந்தக் கடிதத்தைத் தவறவிட்டுவிட்டேன். ரொம்பத் தேடினேன்.”

“எப்படிக் கிடைக்கும்?”

“அந்தக் கடிதத்தின் வாக்கியங்கள் எனக்கு மனப்பாடமாகி விட்டன. என் அன்புக்–குரிய சிதம்பரம் அவர்களுக்கு, நாம் சென்ற தினங்களாகச் சந்தித்துச் செலவழித்த இனிமையான கணங்களை என்னால் மறக்க முடியாது. உங்கள் மாதிரி நல்லவரைச் சந்திப்பது இனி எனக்குச் சாத்தியமில்லை. நம் சந்திப்பு, நம் சிநேகிதம் இயல்பாகத் திருமணத்தில் முடிந்திருக்க வேண்டும். அப்படி முடியாதபடி விதி தடை செய்து–விட்டது. என் விருப்பத்திற்கு எதிராக, நான் செய்ய வேண்டிய கடமை ஒன்று இருக்கிறது. அந்தக் கடமைக்காக நான் ஒருவரைக் கட்டாயமாகத் திருமணம் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது... நான் உங்களுக்குச் சொன்னபடி என் பெற்–றோர்கள் ஏழைகள், என்னைப் படிக்க வைப்பதில் சிரமப்பட்டிருக்கிறார்கள். என் தந்தை நிறையக் கடன்பட்டிருக்கிறார். அதனால் அவர் குமாஸ்தாவாகப் பணி செய்யும் அந்தப் பெரிய வீட்டில் நான் மருமகளாகப் போக வேண்டியது தேவையாக இருக்கிறது... கடன் அடைபடுவதற்கு, என் தந்தை நிம்மதியுறுவதற்கு, என்னைக் கேட்டு விலை பேசி என்னை மணம்செய்துகொள்ளப் போகிறவரைப் பற்றி நான் கேட்ட விவரங்கள் எனக்கு நிம்மதி தரவில்லை. ஆனால் ஒப்புக்கொண்டுவிட்டேன். திருத்த முயற்சி செய்யவேண்டும். உங்களைப் போன்ற நல்லவர்களின் ஆசியும் மன்னிப்பும் தேவை. பிரிகிறேன். என் மனத்திலிருந்து என்றும் பிரியமாட்டீர்கள்... நிர்மலா”... சிதம்பரம் கண் ஓரத்தைத் துடைத்துக்கொண்டான். “ஆத்மா! இந்த நூற்றாண்டில் பெண்ணை விலைக்கு வாங்குகிறார்களாடா. அந்தக் கிராதகன் யார்? அவன் என் வாழ்வில் இருந்த ஒரே சந்தோஷத்தை விலைகொடுத்து வாங்கிச் செல்கிறான்.”

“கிராதகன்தான்!” என்றேன். அவன் எங்கே கிராதகன் என்பது பற்றிச் சற்றுக் குழப்பாக இருந்தது. கனவிலா நனவிலா?

“அவனை நான் பார்க்க மிக முயன்றுகொண்டிருந்தேன்... இதுவரைத் தென்படவில்லை. தென்பட்டால்...”

“தென்பட்டால்?”

சிதம்பரம் எதிரே பிளாஸ்டிக் தட்டில் ஆப்பிள்களுக்கு அருகே வைத்திருந்த கத்தியை எடுத்துக்கொண்டான். “இந்த மாதிரி கத்தி ஒன்றுதான் தேடிக்கொண்டிருந்தேன்...”

“எதற்கு?”

“அவனைக் கொல்வதற்கு...”

“பையா! டேக் இட் ஈஸி... இதெல்லாம் நிஜமில்லையே?”

“என்னைப் பொறுத்தவரை எல்லாம் நிஜம்.”

“ஹஹ!” என்றேன்.

“என்ன ஹஹ?”

“சான்ஸஸ் ஆர்... நீ அவனைப் பார்க்கவே போகிறதில்லை. நோட்டுப் பூரா காதல் பாட்டு எழுதும் உன் கற்பனை செய்த, ஸப்கான்ஷியஸ் மைண்ட் செய்த, கதையில் ஒருவன் அவன். அவன் கல்யாணம் செய்துகொள்ளப்போவதும் அதே கற்பனையில், அதே கனவில்...”

“கனவாவது, நிஜமாவது! எனக்கு இரண்டும் ஒன்று என்று எத்தனை தடவைச் சொன்னேன். அவனைப் பார்க்கப் போகிறேன். பார்த்ததும் அவன் அருகே சென்று சத்தக்...”

சிதம்பரம் என் மேஜைமேல் இருந்த புத்தகங்களைப் புரட்டினான். அவைகளில் ஒன்றிலிருந்து நழுவிய படத்தை எடுத்தான்... திடுக்கிட்டான்.

“ஆத்மா! இந்த போட்டோ?”

“என்ன போட்டோ?”

“புத்தகத்துக்குள் இருந்தது. இது எப்படி?”

“இது என் கர்ல் ஃப்ரெண்ட். இவளை நான் கல்யாணம் செய்து கொள்ளப்போகிறேன்” என்றேன்.

“ஆத்மா, இதுதான் என் நிர்மலா...”

“என்ன!”

“ஆத்மா, நீதானா அந்தக் கிராதகன்? உன்னைச் சந்திக்கத்தானா இத்தனை அலை அலைந்தேன்...? ஆத்மா, என் அன்புள்ள ஆத்மா, ஆப்பிள் வெட்டுகிற கத்தி ஆத்மாவைத்தான் வெட்டப்போகிறதா!”

“ஐ ஸே, சிதம்பரம்! முட்டாள்தனமாகப் பேசாதே. நீ பார்த்ததெல்லாம் கனவு. ஏய் ஸில்லி ஃபூல், கிட்ட வராதே. கத்தியைக் கீழே போடு!”

“கனவு நிஜம் எல்லாம் எனக்கு ஒன்றுதானடா! வித்தியாசம் கிடையாது. இப்பொழுது உன்னுடன் பேசிக்கொண்டிருக்கிறேனே அதுகூட நிஜமா கனவா என்பது எனக்குத் தெரியவில்லை. உன்னை அணுகி வந்து உன் வயிற்றில் ‘சத்தக்’ என்று குத்தப்போகிறேனே, இதுகூடக் கனவா நிஜமா என்பது தெரியவில்லை.”

நேராக, நான் சமாளிப்பதற்குள் என் மேல் பாய்ந்து அந்தக் கத்தியால் என் மார்பு எலும்புகளுக்குச் சற்றுக் கீழே குத்தினான்.

வலிக்கவே இல்லை.

*1971*



www.writersujatha.com